www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

65/

# T இரண்டாம் பருவத் தொகுத்தறித் தேர்வு - 2024

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி தமிழ் மதிப்பெண்கள்: 60

அ) சரியான விடையைத் தேர்ந்தெடு:- 10×1=10

1) தூண் என்னும் பொருள் தரும் சொல்
அ) ஞெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை

2) 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர்
அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

3) மயிலும், மானும் வனத்திற்கு ________ தருகின்றன
அ) களைப்பு ஆ) வனப்பு இ) மலைப்பு ஈ) உழைப்பு

4) 'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் 'பரி' என்பதன் பொருள் ________
அ) யானை ஆ) குதிரை இ) மான் ஈ) மாடு

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-

5) கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவர் ________

6) கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ________

இ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 7) கழனி | - | கதிரவன் |
| 8) நிகர் | - | மேகம் |
| 9) பரிதி | - | சமம் |
| 10) முகில் | - | வயல் |

ஈ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி. 5×2=10

11) கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

12) கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

13) கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

14) நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

15) தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?

16) ஓவியங்களின் வகைகள் யாவை?

17) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

உ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளி. 3×4=12

18) கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

19) கேலிச்சித்திரம் என்றால் என்ன?

20) கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.

21) 'இன்பத்தமிழ்க் கல்வி' - பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

22) கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T (2) VII தமிழ்

ஊ) மனப்பாடத்தை அடிபிறழாமல் எழுதுக:- 4+2=6

23) கட்டி அடிக்கையால் ............ ஏறப் பரியாகு மே (கீரைப்பாத்தியும், குதிரையும்)

24) 'எண்ணி' எனத் தொடங்கும் திருக்குறள்

எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 10×1=10

25) பிரித்து எழுதுக:- 1) உயர்வடைவோம் 2) வனப்பில்லை

26) சேர்த்து எழுதுக:- 1) இவை+எல்லாம் 2) வார்ப்பு+எனில்

27) கலைச்சொல் தருக: i) Artist ii) Degree

28) இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.

1) புல் தின்றது 2) கடல் பார்த்தான்

29) சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக:- (உன், நாம்)

i) __________ ஏழாம் வகுப்பு மாணவர்கள்

ii) _________ பெயர் என்ன?

30) பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.

i) தீ __________ ii) தை __________

31) பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக:-

i) அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்

ii) கண்மணி நாளை பாடம் படித்தான்

32) ஓர் எழுத்துச் சொல்லால் நிரப்புக

(i) __________ பறக்கும் (ii) _________ சுடும்

33) வேர்ச்சொல்லுக்கான மூன்று காலத்தையும் எழுதுக:- (i) நட

34) இருபொருள் தருமாறு தொடரில் அமைக்க:- (i) ஆறு

ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:- 1×6=6

35) நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால் எத்தகைய படைப்புகளை உருவாக்குவீர்கள்?

36) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:- 1×6=6

37) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

38) கட்டுரை எழுதுக:- எங்கள் ஊர்

(முன்னுரை -அமைவிடம்-பெயர்க்காரணம்-தொழில்கள்-சிறப்புமிகு இடங்கள்-திருவிழாக்கள் - மக்கள் ஒற்றுமை - (முடிவுரை)

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com